[2015 பிப்ரவரி 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஓர் உத்தரவினை வழங்கியிருக்கிறார்கள். குடிதண்ணீர்ப் பிரச்சினையை சமாளிப்பதற்காக, மின் இணைப்பு தருவதிலே சிறப்பு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று அம்மா அவர்கள் அளித்த உத்தரவின் அடிப்படையிலே, இன்றைக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் மின் இணைப்பு வழங்குவதிலும், அதிலே* dedicated feeder-*க்கென தனியாக மின் இணைப்பு கொடுப்பதற்கும் முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தக் கருத்தை எழுத்து மூலமாகக் கொடுத்தீர்களென்று சொன்னால், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறும் இந்த அரசு, நிச்சயமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

புறவழிச் சாலை

***38075—திரு. என்.எஸ்.என். நடராஜ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, காங்கேயம் மற்றும் வெள்ளக்கோவில் பகுதிகளில் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் மற்றும் வெள்ளக்கோவில் நகரங்களுக்கு புறவழிச் சாலை அமைக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.*

திரு. என்.எஸ்.என். நடராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானை பிறந்த நாள் காணும் நம்முடைய மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*நடந்து முடிந்த சட்டமன்ற இடைத் தேர்தலில் ஸ்ரீரங்கம் தொகுதி மக்கள் மிகப் பெரிய வெற்றியைத் தேடித் தந்ததைப் போல, 2016 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் மாண்புமிகு அம்மா அவர்கள் உலக சாதனையாக ** அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ.-க்களைத் தவிர யாரும் இல்லை என்ற சூழலை உருவாக்குகின்ற காலம் மிக விரைவிலே வர இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தைக்கு என்ன வேண்டும் என்று அந்தத் தாய் உணருவதைப்போல, நம்முடைய மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள், காங்கேயம் தொகுதி 1991-1992 ஆம் ஆண்டு தேர்தலைச் சந்தித்தபோது பி.ஏ.பி. பாசனப் பகுதி மூன்று மண்டலமாக இருந்ததைப் பிரித்து, காங்கேயம், வெள்ளக்கோவில் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்தார்கள்.

*** உறுப்பினர் திரும்பப் பெற்றுக்கொண்டதால் அகற்றப்பெற்றது.*

20 ஆண்டுகளுக்கு முன்பாக காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இப்படி பல்வேறு திட்டங்களைக் கொடுத்த நமது மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் காங்கேயம் தொகுதிக்கு ஒரு மின் மயானத்தைக் கொடுத்தார்கள், வெள்ளக்கோவிலுக்கு ஒரு மின் மயானத்தைக் கொடுத்தார்கள். கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கென 20 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட பைப்புகளையெல்லாம் மாற்ற வேண்டும் என்று இன்றைக்கு 200 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கின்றார்கள். நம்முடைய மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் காங்கேயம் தொகுதிக்கு தாலுகா அலுவலகத்தையும், வெள்ளக்கோவிலுக்கு யூனியன் அலுவலகத்தையும் கொடுத்தார்கள். காங்கேயத்தில் படிக்கின்ற மாணவ, மாணவிகள் உயர் கல்வி பெற வெளி மாவட்டத்திற்குச் செல்ல வேண்டியிருந்த காரணத்தினால், ஒரு கல்லூரியைக் கொடுத்தார்கள். அது மிகச் சிறப்பாக நடந்துகொண்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் நகரமாக கொச்சி திகழ்ந்து கொண்டிருந்தது. அதேபோல, தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியினால், காங்கேயம் தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் சிறப்பாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. நம்முடைய மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் காங்கேயம் பகுதியிலும், வெள்ளக்கோவில் பகுதியிலும் புறவழிச் சாலை அமைக்க திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலை எண் 209-ல் சத்திரப்பட்டி அமைந்துள்ளது. அந்த ஊரின் வழியாக பழனி திருக்கோயிலுக்கு தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற சமயங்களிலே தென் மாவட்டங்களிலிருந்து குறிப்பாக தேனி, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலிருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் நடந்து

2015 பிப்ரவரி 23]

வருகின்றார்கள். இதை உணர்ந்த மத்திய அரசு 2009-ல் சத்திரப்பட்டிக்கு புறவழிச் சாலை அமைப்பதற்கு அனுமதி வழங்கியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பொதுமக்களின் நலன் கருதி நிலம் கையகப்படுத்துகின்ற பணியை விரைவாக முடித்து அங்கே புறவழிச் சாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்களின்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தேசிய நெடுஞ்சாலை எண் 209-ல் இருக்கின்ற சத்திரப்பட்டி, ஒட்டன்சத்திரம் ஆகிய இரண்டு பணிகளுக்குமே விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பணிகள் நிறைவு பெற்ற பிறகு அங்கே புறவழிச் சாலை அமைக்கின்ற பணி துவங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, பழனி திருக்கோயிலுக்கு பல்வேறு நகரங்களிலிருந்து பக்தர்கள் சென்று வருகின்றார்கள். அவர்களுக்குத் தேவையான சாலை வசதியை செய்து தர வேண்டும் என்று கேட்டார்கள். தற்போது paver block போடப்பட்டு வருகிறது. ஆகவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இது தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தினாலே மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்று, அந்தப் பணிகளைச் செய்ய வேண்டியிருப்பதால், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலித்து, மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்று, அங்கே சாலை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட போரூர் மேம்பால அடிப்படைப் பணிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தொடர் முயற்சியால் தற்போது முற்றுப்பெறும் நிலைக்கு வந்திருக்கின்றன என்றாலும்,

கட்டுமானப் பணிகள் இன்னும் துவங்கப்படவில்லை. அது, அந்தத் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை ஆகும். இந்த அவையிலே பல முறை நான் இதை வலியுறுத்தியிருக்கின்றேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி இப்பணியை இந்த ஆண்டே துவக்கி அடுத்த ஆண்டுக்குள் நிறைவடையச் செய்வதற்கான முயற்சிகளைச் செய்வாரா எனத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி பாலத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். கடந்த கால ஆட்சியில் அதற்கு டெண்டர் விடப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி மலர்ந்த பிறகுதான் அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்தப் பாலத்திற்குத் தேவையான நிலத்தை அப்போதைய அரசு கையகப்படுத்தாமலேயே பாலப் பணிக்கு டெண்டர் விடப்பட்டு பாலப் பணிகள் துவங்கப்பட்டன. நில உரிமையாளர்கள் எல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினாலே, வழக்கு நடைபெற்று, அம்மா அவர்களுடைய அரசால் அதற்குத் தீர்வு காணப்பட்டு அந்தப் பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. பாலப் பணிகள் நடைபெறுகின்ற அந்தச் சாலையின் கீழ்ப் பகுதியில் குடிநீர்க் குழாய்கள் சென்று கொண்டிருக்கின்றன. அந்தக் குடிநீர்க் குழாயை மாற்றுவதற்கு பலமுறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும், இதுவரை யாரும் முன்வராத காரணத்தினாலே அரசு அதற்குண்டான நடவடிக்கையை எடுத்து, அந்தக் குழாய்களை அகற்றாமலேயே பாலப் பணிகள் நடைபெறுவதற்கான தொழில்நுட்பங்களை மேற்கொண்டு, இப்போது டெண்டர் விடப்பட்டு, விரைவிலே அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

முற்பகல் 10-20

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகராட்சி வளர்ந்துவரும் நகராட்சி*

2015 பிப்ரவரி 23]

ஆகும். அந்த நகராட்சியினுடைய சாலைகள் மிகக் குறுகிய சாலைகளாக இருக்கின்ற காரணத்தினாலே வேதாரண்யம் பகுதியிலிருந்து உப்பு, சவுக்கு போன்ற பொருட்களை ஏற்றிவரும் லாரிகள் பழைய பேருந்து நிலையத்திற்கு அருகில் வருகிறபோது போக்குவரத்து தடைபட்டால் வேறு எந்த ஊர்களுக்கும் போக முடியாதபடி நெருக்கடி ஏற்படுகிறது. திருவாரூர்-நாகை சாலையை இணைக்கக்கூடிய புறவழிச் சாலைப் பணிகள் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டு கிடப்பில் இருக்கின்றன. ஆகவே, அவற்றை உடனடியாகத் தொடங்கி, திருத்துறைப்பூண்டி நகராட்சியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை சரி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலைக்குத் தேவையான நிலம் தனியாரிடத்தில் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தைக் கையகப்படுத்துகின்றபோது, அதன் மதிப்பீடு அதிகரித்திருக்கின்ற காரணத்தினாலே தற்போது வழிகாட்டி மதிப்பின்படி அறநிலையத் துறைக்குக் கொடுக்க வேண்டிய நிதி குறித்து நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளெல்லாம் பரிசீலித்து, அதற்குண்டான தொகை வழங்கப்பட்டு, விரைவாக அந்தப் பணிகளைத் துவங்குவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன் அவர்கள்.*

திரு. சுப. தங்கவேலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி-இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலை எண் 210, மதுரை-தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலை எண் 49 இரண்டையும் இணைக்கும் சாலை பல ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டது. அது சித்தாரோட்டை, தேர்போகி, அத்தியூத்து, பனைக்குளம், புதுவலசை, அழகர்குளம் போன்ற பேரூராட்சியாக உயர வேண்டிய தகுதியுடைய பெரிய கிராமங்கள் வழியாகச்*

[2015 பிப்ரவரி 23

சென்றடைகிறது. இந்தச் சாலை சீரமைக்கப்பட்டால் இராமேஸ்வரத்திற்கு மேலும் மிகச் சிறந்த புறவழிச் சாலையாக மாற்றி அமைக்கப்பட்டு, இராமநாதபுரம் நகருக்குள் போக்குவரத்து அடர்வுகள் குறையும். 12 கிலோ மீட்டர் குறைந்த பயணத்தில் வட மாவட்டங்கள், வட மாநிலங்களிலிருந்து வருகின்ற வாகனங்கள் இராமேஸ்வரம் செல்ல ஏதுவாக இருக்கும். எனவே, தமிழக அரசு செலவு இல்லாமல் ஒரு துளி மையை செலவழித்து ODR என்று இருப்பதை MDR ஆக தரம் உயர்த்த வேண்டும். மத்திய அரசாங்கம் C.R.F.-ல் எடுத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாவட்ட இதர சாலையை (ODR) இருப்பதை மாவட்ட முக்கிய சாலையாக அதாவது, MDR-ஆகத் தரம் உயர்த்தித் தர முன்வருவார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட இதர சாலையை, மாவட்ட முக்கிய சாலையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று இங்கே குறிப்பிட்டார்கள். வாகனங்களினுடைய எண்ணிக்கையைக் கணக்கிட்டுத்தான் எந்த வகைச் சாலை என்பது நிர்ணயிக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலையில் செல்கின்ற வாகனங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, அங்கே அதிக வாகனங்கள் சென்றால் அதை MDR-ஆகத் தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

48—

அங்கன்வாடி மையம்

***42078—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—